# பாவை

முத்திங்கள் அறிவு மலர் - 1

மாசி — சித்திரை







விலை : 15/-

★ வளர் கலைஞர் மன்ற வெளியீடு ★

# ராஜா படமாடம்

சிறந்த முறையில்
படங்கள் பிறேம் செய்வதற்கும்
மற்றும்
கறுப்பு - வெள்ளை கலர்ப்படங்கள் பெருப்பித்துத்
தருபவர்கள்.

ராஜா படமாடம்

யாழ் வீதி வல்வெட்டித்துறை

---

# சரவணாஸ்

ஏலக்காய், கராம்பு, கூட்டுத்திரவியப் பக்கற்றுக்கள்.
எள்ளுஅல்வா, கச்சான்அல்வா, கடலைப்பருப்பு
போன்ற உணவு வகைகளைத் தரமான சுவையுடன்
தருபவர்கள்.

சரவணாஸ் உற்பத்தியாளர்கள்
முருகமூர்த்தி வீதி
பொலிகண்டி நெல்லியடி

# சோதனைகள் அனைத்தும் சாதனைகள் படைக்கும்



ஒரு போராளியின் கால் சற்றுச் சுழுக்கி விட்டது. நொண்டி நொண்டியும் பயிற்சியில் ஈடுபட்டுக் காண்டிருந்தான். அவன் மிகவும் கஸ்ரப்பட்டு பயிற்சி செய்து கொண்டிருந்ததைப் பார்த்த சக போராளி என்னடா அப்படி ஏலாத வேளையிலும் பயிற்சி வேண்டிக் கிடக்கின்றது ஏலாது விட்டால் போய் படுக்க வேண்டியது தானே? என்றான். அதற்கு போராளி! நீ ஒரு முட்டாள் என் சுழுக்குவலி தற்காலிகமானது எமது அர்ப்பாயிப்புக்களால் மலரப்போகும் தமிழீழம் மகத்தானது என்றான். சக போராளி வாயடைத்துப் போனான். என்பதைச் சொல்லவும் வேண்டுமா? பலர் உழைப்புக்கும் முயற்சிக்கும் பயந்து கொண்டும். தயங்கிக் கொண்டும் பல அரிய சாதனைகளையும், தியாகங்களையும் செய்யத்தவறி விடுகின்றார்கள் சிறு சிறு கஸ்டங்களையும் உடற்சிரமங்களையும் பெரிதாக எண்ணிக் கொண்டு எதையும் செய்யாமல் சோம்பேறிகளாகத் திரிவதில் பயன் ஏதும் விளையப்போவதில்லை. ஒரு விவசாயி விதைக்கச் சிரமப்பட்டால் விளைச்சல் காண முடியுமா? ஒரு பெண் பிரசவ வலிக்குத் தயங்கினால் அவள் தாயாக முடியுமா? ஒரு போராளி போராடாது விட்டால் வெற்றி காண முடியுமா? தியாகங்கள், வீரங்கள், சுதந்திரங்கள் வளர வேண்டுமானால் அதற்குப் |பயிற்சிகள், சிரமங்கள், துன்பங்கள் போன்றவைகளை நாம் அனைவரும் தாங்கிக் கொள்ளும் மனோ பலம் அடையத்தான் வேண்டும் ஏனோ சிலர் உணர்கின்றார்கள் இல்லை. சிறு சிறு தடைகளுக்காக எமது தாயகத்திற்கான பணிகளை ஒத்திப் போடுவது புத்திசாலித்தனமாகாது. எமது தியாகங்களும் வீரங்களும் தரப்போகும் பலன்களை ஒரு கண மேனும் ஒருவன் சிந்தித்துப் பார்ப்பானேயானால் சிரமங்கள், கஸ்டங்கள் பயிற்சிகளைத் தாங்கிக்கொள்ளும் மனோ பக்குவம் அவனுக்குத் தானாகவே வந்து விடும். வேறு வழியில் செல்ல வேண்டுமானால் நாம சிரமத்தை எண்ணிப்பார்க்காமல் அதனால் மலரப் போகும் சுதந்திர தமிழீழம் புதிய சமுதாயம் போன்றவையே எம் கண் முன்னால் தோன்றும். தேசமீட்புப் போரினால் ஏற்படப் போகும் காயங்களை நாம் அடையப் போகும் தமிழீழ சுதந்திரத்தால் மாற்றி விடலாம். பல தரப்பட்ட போராட்ட வடிவங்களை நாம் தொடங்கி விட்டால் எம் தமிழீழ எல்லையினை நாம் விரைவில் சென்றடையலாம். சோதனைகள் அனைத்தும் எமக்குச் சாதனையாகவே அமையும்.

— ஆசிரியர்

## சாதனை

### விண்வெளி மனிதர்கள்

முதன் முதலில் விண்வெளியில் பறந்து சாதனை புரிந்த மனிதன் சோவியற் யூனியனைச் சேர்ந்த யூரிககாலின்.

ஆனால் அதிக நாள் தங்கியிருந்து சாதனை புரிந்தவரும் சோவியற் யூனியனைச் சேர்ந்த யூளரொமனென்கோ என்பவராகும் இவர் விண்வெளியில் தங்கியிருந்த நாட்கள் 238 நாட்களாகும்.

### பப்பிள்கம்

இப்போது சிறுவர் ரசித்து சுவைத்து வாயினால் குமிழ் விடும் ''பப்பிள்கம்'' 1928 ஆம் ஆண்டு ''வால்ட்டர் டைமா'' என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது அவர்கள் கண்டுபிடித்த பப்பிள்கம தயாரிக்கும் யோசனையை பைத்தியக்காரத்தனமானது என்றும், விலைபோகாது என்றும் பலரும் ஏளனம் செய்தார்கள். ஆனால் ஆண்டுக்கு 150 மில்லியன் டாலருக்கு மேலாக விற்பனையாகின்றது பப்பிள்கம்.

# தேசத்தின் தூண்



நாவினிக்க நறும் பானமாய்
பெட்டியாய் பாயாய்
வீட்டுக் கூரையாய்
அலங்கார அருங்கலைப் பொருளாகி

முத்தமிழ் வேந்தருக்கு
முதுகிழவி உன்பழம் தந்து
செப்பரும் புகழ் கொண்டான்
தேசமே அதை அறியும்.

கிழங்கதனை அவித்துண்டால்
கீதங்கள் பாடிடலாம்
ஒடியல்மா பிட்டுண்டால்
உலகத்தை வென்றிடலாம்.

பனாட்டின் சுவைஅறிந்தால்
பரதேசம் போவாரோ
நுங்கை அருந்தியவர்
நுகருவாரோ குளிர் பானம்'

எத்தனை சுவை பண்டம்
எங்கள் பனை மரத்தில்
அத்தனையும் தமிழீழத்தில்
அன்னையைப் போல் வழங்குமாம்.

சின்னஞ் சிறு கன்றாய்
தோன்றிடும் பனையே
தேசத்தின் தூணாய்
நின்றிடும் நாளை.

கற்பக தருவே நீ
காலத்தின் பெரும் கொடை
பொருளாதாரதலையை
பொசுக்கிடும் காமதேனு.

கால் நடை உணவாகி
கற்கணடாய் பதநீர் ஈந்து
வெல்லமாய் சீனியாய்
வேதனை தனைத் தீர்த்து.

வீட்டுக்கு நான்கு பனை
வேலியிலே நட்டு வைத்தால்
எல்லைக்கும் காவலது
பசித் தொல்லையும்
போக்குமது.

நாட்டை காத்து நின்ற நம்
மாவீரர் போன்றே
நம் வீட்டையும்
காத்திடுவாய் பனைமரமே.

- நா. மனோன்மணி

"வினை விதைத்தால் விந்தனை ஏற்படும்
பனை விதைத்தால் பயனதுவே ஏற்படும்"



# மங்கையர் விடுதலை

தமிழீழத்தின் விடிவிற்காய் நிற்கும் மங்கையர்க்கு
விடிவு காலம் தான் தேவையாம்
சமத்துவத்தின் எல்லையில் நிற்கும் மங்கையர்க்கு
வெற்றி தான் எப்போ வருமாம்.

வாழ்வை நோக்கி நிற்கும் மங்கையர்க்கு
தொல்லையோ மிக தொல்லை
சீதனம் அற்று நிற்கும் மங்கையர்க்கு
வாழ்வுதான் எப்போ கிட்டும்.

பட்டம் பெற்று நிற்கும் மங்கையர்க்கு
வேலை மட்டும் இல்லையே
வேலைக் கென்று விண்ணப்பித்தாலும்
எத்தனை எத்தனை சோதனைகள்.

உயர்கல்வி கற்றாற்கும் மங்கையர்க்கு
பல்கலைக் கழக அனுமதி இல்லையே
புள்ளிகளோடு படிப்படியாக கூடிச்சென்று
எல்லை தான் தாண்டி விட்டது.

போராட நிற்கும் மங்கையர்க்கு
சுதந்திரம் தான் கிடைக்குமா?
ஆயுதம் ஏந்தியும் போரிட்டு
வெற்றிப் பாதையில் நிற்கிறார்கள்.

விடுதலை கேட்டு நிற்கும் மங்கையர்க்கு
விடிவு காலம் தான் விரைந்து வருமா?
என்றோ ஒரு நாள் விடிவு மலரும்
நாளை பிறக்கும் நல்ல சமுதாயம்.

வாழ்க என்றும் மங்கையர்
மலர்க என்றும் விடுதலை.

திருமதி கலைமதி வரதராஜன் (பிரான்ஸ்)

# இவன்தான்ரா மனிதன்



வானம் ஒரே இரைச்சலாக இருந்தது மூன்று பொம்மர்கள் அசுர வேகத்துடன் வட்டமிட்டபடி அடல் கிராமத்தில் குண்டுகளைப் பொழிந்து கொண்டிருந்தன.

இந்த அமளியிலும் இளைஞர்கூட்டம் ஒன்று தெருவோரமிருந்த மண்டபமொன்றில் ஆனந்தமாகச் சீட்டாடிக் கொண்டிருந்து தெருக்களிலும் வீட்டு முற்றங்களிலும் நின்று சிலர் விமானங்கள் குண்டு போடுவதையும் குண்டுகள் வீழ்ந்து வெடிப்பதையும் ரசித்துக் கொண்டிருந்தனர்.

அப்போது ஒருவன் கதறி அழுதபடி ஒழுங்கை ஒன்றால் ஓடி வருகிறான். அவனைச் சுற்றி கூட்டம் கூடியதும். சீட்டாடிக் கொண்டிருந்த இளைஞர்களில் ஒருவன் அவனை மறித்து '' என்ன நடந்தது? '' என்று விசாரிக்கிறான்.

'' என்ரை வீட்டுக்குப் பொம்பர் அடிச்சுப் போட்டுதாம். வீட்டிலிருந்த என்ரை இரண்டு பிள்ளைகள் காயத்தோடு ஆஸ்பத்திரிக்கு கொண்டு போயினம் என்று கேள்விபட்டு ஓடிவாறன்.'' அவர் கண்களில் கண்ணீர் முட்டி வழிந்தது. அவன் கூட்டுறவுச் சங்கமொன்றில் வேலை செய்பவன். அவனுடைய வீட்டுக்கு குண்டு போட்ட செய்தியை யாரே சொல்யிருக்கிறார்கள்.

பதட்டத்துடன் காணப்பட்ட சாரங்கனை ஆசுவாசப்படுத்திய இளைஞன் ஒருவன் சாரங்கனை சைக்கிள் ஒன்றில் ஏற்றிக்கொண்டு ஆஸ்பத்திரிக்கு செல்ல தயாரானான்.

அப்போது எதிர்ப்பக்கத்தால் நாலைந்து பேர் ஓடி வத்துகொண்டிருந்தனர். அவர்கள் பதறியபடி ஓடி வருவதை கண்ட சாரங்கன் '' உங்கள் வீட்டுக்கும் குண்டு போட்டு விட்டார்களே '' என்று தனக்கு கவலை இருந்த போதும் பரிவோடு விசாரித்தான்.

அதற்கு அவர்கள் கேலியாக சிரித்தபடி '' உன்ரை வீட்டுக்கு குண்டு போட்டால் எங்கட வீட்டுக்கும் போடுதோ? நாங்கள் பொம்பருக்கு பயந்து ஓடி வரவில்லை ஆமிக்காம்பில் இருந்து வெளியாலை வந்து முன்னேற முயன்ற இராணுவத்தினை எதிர்த்துச் சண்டை நடக்குது அங்கே போராளிகளுக்கு உதவிசெய்ய ஆட்கள் சேர்க்கினம் அப்படி உதவி செய்யிறவர்களை ஏற்றிக் கொண்டுபோக மினிபஸ் நிற்குது. அது தான் ஒரு மாதிரி ஓழிச்சு ஓடி வாறம். '' இப்படி அவர்கள் சொன்னது சாரங்கனுக்கு அதிர்ச்சியாக இருந்தது.

அவர்களை வெறுப்புடன் பார்த்தவன் ஆவேசம் கொண்டவனாகிறான். '' அந்த மினிபஸ் எங்கை நிற்குது எங்கடை நாட்டுக்காகப் போராடுற போராளிகளுக்கு வேறு என்ன உதவியை நாங்கள் செய்யப்போகிறம் '' என்றவன் களத்தில் நிற்கும் போராளிகளுக்கு உதவுவதற்காக அந்த மினிபஸ்ஸை நோக்கி நடக்கிறான்.

– ஈழத்தீபன்

" காலத்தோடு களை எடு
நேரத்தோடு உரமிடு ''

## எமது கடமைகள்

கொக்கரக் கோக் சேவல் கூவப்
பொழுது விடிந்தது — நாம்
அக்கறையாய் அயர்வு நீக்கித்
துயில் எழு கின்றோம்.

ஆலயத்தில் மணியின் நாதம்
டாங்கு டாங்கு டாங் — நாம்
காலைக்கடன் யாவும் செய்து
கல்வி கற்கின் றோம்.

காகம் குருவி பறவைகளின்
கானம் கேட்குமே — நாம்
ஏகனான இறைவனையே
ஏற்றி வணங்குவோம்.



வெள்ளை ஆடை பூண்டு நாங்கள்
விரைந்து பள்ளி செல்கிறோம் — மிகக்
கள்ள மிலா உள்ளத் தோடு
கல்வி நலம் பெறுகிறோம்.

மாலை நேரம் பாட்டுப் பாடி
மகிழ்வி னோடு ஆடுவோம்
சோலை எங்கும் சுற்றி வந்து
ஓடி விளையாடு வோம்.

இரவில் பாடம் படித்த பின்பு
இனிய உணவு உண்கிறோம்
அன்னை தந்தை யோடு கூடி
ஆனந்தமாய்த் தூங்குவோம்.

— கோப்பாய் சிவம்

## திலகம் இடுவோம்

முகத்தை அழகு செய்யும் ஒன்றாகத் திலகம் விளங்குகிறது. கறுத்தப் பொட்டு, சாந்துபொட்டு குங்குமப் பொட்டு, ஒட்டுப் பொட்டு என இன்று பலவகையான திலகங்கள் உள்ளன.

உண்மையில் அழகு செய்வது மட்டும் அன்றி பல நற்செய்திகளையும் தாங்கியுள்ளது திலகம் கரும்ஸாட்டு திருஷ்டி பரிகாரம் மோலும் உரிய முறைப்படி தயாரிக்கப்பட்ட கரும்பொட்டு குளிர் மையைத்தரும் மூலாகாரகளில் ஆக்ஞா சக்கரம் அமைந்துள்ள இடம் இது, இங்கே குளிர்மைப் படுத்தும் போது மனம் சாந்தமடைகிறது. அறிவு பிரகாசிக்கிறது அதனால்தான் ஆன்றோர் சந்தனத்தை திலகம் இடுவதை வழக்கமாகக் கொண்டனர்.

மனோ தத்துவரீதியாகப் பிறர் நம்மை வசப் படுத்த முடியாத காவலாளியாகவும் நெற்றிப் பொட்டு திகழுகிறது. மஞ்சள் ஒரு சிறந்த கிரிமி நாசினியும் தோஷ நீக்கியுமாகும் அதனால் மஞ்சளால் தயரிக்கப்பட்ட குங்குமம் சிறந்த பலனைத்தரும். அப்பாள் அடியார்கள் குங்குமம் அணிவர்.

திருமணமான பெண்கள் குங்குமதிலகம் இடுவர். முக்கியமாக இவர்கள் நெற்றித்திலகம் மட்டுமல்லாது உச்சித்திலகமும் இடுகின்றனர். இது கணவரின் பாதம் தன் சிரம் மேல் இருப்பதாகக் கருதி அவனது பாதங்களில் இடும் திலகம் மங்கல வாழ்வைக் குறிப்பதும் கூட.

கழுத்தே நமது உயிர் நிலை அங்கு தான் தாலிக்கயிறு தொங்குகிறது (பன்னிக்கவும் கொடி) அதனால் சில பெண்கள் கழுத்திலும் திலகம் இடுவது உண்டு. முக்கியமாக நெற்றித் திலகமும் உச்சித்திலகமும் மங்கல மங்கையர்க்கு அவசியமாகும்.

— சிவதா —

---

கல்குவேற்றர்கள் இன்றி எந்தக் காரியமும் நடைபெறுவதில்லை 1942 இதனை கண்டு பிடித்தவர் பிளேய்ஸ் பாஸ்கல் என்பவராவர்.

---

**ஊர்வலம் போவதற்கு மக்கள் தேவை**
**மோட்டார் பவனி எதற்கு?**

# உலக அதிசயங்கள்

## பெரிய முட்டை

உலகிலேயே பெரிய முட்டை கழுகினுடையதோ தீக்கோழியினுடையதோ இல்லை. ''வெள்ளை ஷார்க்'' என்ற மீனின் முட்டை தான் மிகப் பெரியது.

## தேனீ

தேனீ ஒன்று ஆண்டு ஒன்றிற்கு தேன் சுமார் 67 கிலோகிறாம் தேன் சேர்க்கின்றது. இது இந்திய வகையை சேர்ந்த தேனீயின் அளவு. இத்தாலிய வகைத் தேனீயின் அளவு தேனீயின் சேமிப்புத் தேன் 14 கிலோ இலங்கைத் தேனீயின் சேமிப்பு இவைகளை விடக் குறைவாகவே கணிக்கப்படுகின்றன.

## யானைத் தந்தம்

ஆபிரிக்க நாட்டில் வாழும் யானையின் தந்தங்கள் மிக நீளமானவை. இவற்றின் நீளம் சுமார் இரண்டு மீற்றர் இருக்கும். தந்தங்களின் எடை 4 கிலோ முதல் 5 கிலோ வரை இதன் மதிப்பு பல இலட்சமாகும். இதனால் தான் கள்ளக் கடத்தல் காரர்கள் இனை வேட்டையாடியே அழித்து வருகின்றார்கள்.

## ராசியான மார்ச் மாதம்

உலகில் மிகவும் ராசியான மாதம் மார்ச் மாதம் தான். இம் மாதத்தில் பல முக்கிய நிகழ்கழ்வு நடந்துள்ளன. 1847 ஆம் ஆண்டு மார்ச்சில் தொலைபேசி கண்டுபிடிக்கப்பட்டது. 1730 ஆம் ஆண்டு மார்ச்சில் உலகின் முதலாவது தினசரியான ''டெய்லிகுரெண்ட்'' வெளியானது. 1907ஆம் ஆண்டு மார்ச்சில்தான் ரஷ்சியப்புரட்சி ஆரம்மானது. 1475 ஆம் ஆண்டு மார்ச்சில் தான் ஜீலியஸ்சீசர் கொல்லப்பட்டார். ஓவியர் மைக்கல் எஞ்சலோ பிறந்தார். அங்கிள் சாம் காட்டூன் இடம் பெற்றது. மேலும் கூட்டன் பர்கின் பைபிள் வெளியானதும் மார்ச்சில் தான் வெளியானது.

## அதிக நூல்கள் எழுதியவர்

உலகிலேயே மிகவும் அக்கமான நூல்களை எழுதியவர் டுமாஸ் என்பவர் தான் இவர் எழுதிய மொத்த நூல்களின் எண்ணிக்கை 1200 ஆகும்.

## முழுவதும் சுற்றி பார்க்கக் கூடிய கழுத்தமைப்பு

இவ்வுலக உயிரினங்களுக்குள் ஆந்தை ஒன்றிற்கே இரவில் எந்தப் பொருட்களையும் பார்க்கக்கூடிய திறன் ஆந்தைக்கு மட்டுமே உண்டு. ஆனால் இவற்றால் ஏனைய உயிரினங்களைப் போல் கண் விழிகளைத் திருப்பி அசைத்து பார்க்க முடியாது. ஆனால் அதன் கழுத்து தலையை அசைத்து சுற்றி பார்க்கின்றன. இதுவே இயற்கையான அதிசயப் படைப்பு.

## சிங்கத்தின் வாலிலும் நகம்

சிங்கத்தின் வாலிலே குஞ்சம் போன்ற மயிர்க்கற்றையை விலக்கிப்பார்த்தால் முனையிலே கொழுக்கி போன்று ஆணி போன்றும் மிகக் கடினமான கூரியநகம் இருப்பதைக் காணலாம்.

## வெங்காய சாதனை

நாம் தினமும் வெங்காயத்தை உரித்து வேதனைக் கண்ணீர் வடிக்கின்றோம். ஆனால் இவ் வெங்காய உரிப்பில் உலக சாதனையே நடைபெற்றிருக்கின்றது.

அமெரிக்காவில் அலெஸ்ஸ்சென் ஜோன் என்பவர் 50 கிலோ வெங்காயத்தை 3 நிமிடம் 18 விநாடிகளில் உரித்து உலக சாதனை புரிந்து ஆனந்தக் கண்ணீர் வடித்திருக்கின்றார். இச் சாதனை 1980 முதல் இன்றும் கின்னஸ் புத்தகத்தில் பொறிக்கப்பட்டுள்ளது.

**வியாபாரச் சிக்கனம் வாழுக்கையைக் காக்கும**
**எரிபொருள் சிக்கனம் நாட்டினைக் காக்கும**

## கண்டு பிடியுங்கள்

ஒரு வியாபாரிக்கு நான்கு மக்கள் இருந்தனர். அந்த நால்வரின் வயதைக் கூட்டினால் 45 கிடைக்கும். யாராவது அவ் வியாபாரியை பார்த்து "உன் புதல்வர்களின் வயது என்ன?" என்று கேட்டால் அவன் கொஞ்சம் வேடிக்கையாக பதில் கூறுவான். என்னுடைய மூத்த மகனுடைய வயதை இரண்டால் வகுத்தாலும் அவனுக்கு அடுத்தவனுடைய வயதிலிருந்து இரண்டைக் கழித்தாலும் மூன்றாம் மகனுடைய வயதுடன் இரண்டைக் கூட்டினாலும் நான்காவது கடைசிப் பையனுடைய வயதை இரண்டால் பெருக்கினாலும் ஒரே எண் கிடைக்கும் என்பான். அப்படியானால் ஒவ்வொருவனுடைய வயதும் என்ன? யோசித்து கண்டு பிடியுங்கள்.

மூத்தவன்வயது 20 அதை இரண்டால் வகுத்தால் கிடைப்பது 10. அடுத்தவன் வயது 12 அதிலிருந்து இரண்டை கழித்தால் கிடைப்பது 10 மூன்றாவது மகனுடைய வயதுடன் இரண்டைக் கூட்ட வேண்டும் கூட்டினால் 10 கிடைக்க வேண்டும். எனவே அவன் வயது 8.

நான்காவது கடைசி மகனின் வயதை இரண்டால் பெருக்கினால் 10 கிடைக்க வேண்டும். எனவே அவன் வயது 5.

ஆகவே மொத்தம்:- 20+12+8+5=45



## மழலைப் பூக்கள்

இரு வினாக்கள்? ஒரு விடை

1. ஒரு புத்தகத்தின் ஆடை எது?
   இரத்தம் உறிஞ்சும் பூச்சி எது?
2) மலரால் தொடுக்கப்படுவது எது?
   மறையும் சூரியன் நேரம் எது?
3) படித்து முடித்துப் பெறுவது எது?
   பாலர் வானில் பறக்க விடுவது எது?
4) வக்கீல் எடுத்துக் கூறுவது எது?
   படத்திற்குப் போடுவது எது?

விடை,
1) அட்டை 2) மாலை 3) பட்டம் 4) சட்டம்

## சாய்ந்த கோபுரம் மூன்று

உலகில் சாய்ந்த கோபுரங்கள் மூன்று உள்ளன. பைசா நகரத்திலுள்ள சாய்ந்த கோபுரம் ஒன்று "முதலாவது கோபுரம்" மெடியாஸ் நகரில் (மத்திய ருமேனியா) உள்ள VICTORY DRUmTOW எதிரியின் வருகையை அறிந்து முரசறிவிப்பு செய்வதற்காக 1450 ல் கட்டப்பட்டது கட்டும் போதே சாய்வாகத்தான் இருந்தது. இரண்டாவது (தென்கிழக்கு ஸ்விட்சர்லாந்து) செயின்ட்மோரீஸ் நகரில் மாதா கோவில் மணிக்காக 1538 ல் கட்டப்பட்டது. கட்டப்படும் போது நேராக இருந்த இக் கோபுரம் 1738ல் ஏற்பட்ட பூகம்பத்தால் சாய்ந்து விட்டது

## அச்சுப்பிழைக்குத் தண்டனை

புத்தகங்களில் அச்சுப்பிழைகள் ஏற்படுவது புதுமையல்ல. ஆனால் கிறிஸ்தவர்களுடைய மதிப்பிற்குரிய பைபிள் அச்சாகும் போது தவறுகள் ஏற்டுவது அரிது.

1638 ம் ஆண்டில் அச்சிடப்பட்ட பைபிள் புத்தகத்தில் ஏற்பட்ட அச்சுப்பிழைக்காக அச்சகத்தாருக்கு மூவாயிரம் (3,000) பவுண் அபராதம் விதிக்கப்பட்டது. 1638 ஆம் ஆண்டில் இந்த அளவு அபராதமாக விதிக்கப்பட்டது என்றால் எம்மால் நம்ப முடிகிறதா!

## உலக கால்பந்தாட்ட வெற்றிக் கோப்பை

1970-ம ஆண்டளவில் ஜுல்ஸ் ரெய்மட்" என்பவர் பெயரால் வழங்கப்பட்டு வந்தது. 1974-ல் இருந்து மேற்கு ஜேர்மனியில் நடைபெற்ற பந்தையத்திலிருந்து வழங்கப்படுகின்றது. 36 சென்ரி மீற்றர் உயரமுள்ள இக் கோப்பை 5 கிலோ எடையுள்ளது. தங்க முலாம் பூசப்பட்டுள்ளது.

★ சோதிட உலகம் :

# மனைப் பொருத்தம்

வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சம் குறித்தும் நுணுக்கமான பரிசீலனை நடத்தி அனுகூல பிரதிகூலங்களை ஆராய்ந்து அவற்றை சாஸ்திரங்களாக உருவாக்கி மனிதர் வாழ்வாங்கு வாழ வழி காட்டியுள்ளனர் நம் முன்னோர்கள்.

இவ்வகையில் இப்போது இங்கே நாம் கவனம் செலுத்த இருப்பது நாம் குடியிருந்து வாழ்க்கையை நடாத்துகின்ற வீட்டை, மனைகளைப் பற்றியதாகும்.

கட்டிடக் கலை தொடர்பாக நமது முன்னோர்க்கு இருந்த அறிவுக்கும் ஆற்றலுக்கும் நமது செந்தமிழ் நாடெங்கிலும் கம்பீரமாக காட்சி தரும் தொன்மை வாய்ந்த ஆலயங்களே சான்றுகளாக திகழ்கின்றன.

புதுமனை நிர்மாணம் செய்யப் புறப்படும் போது முறைப்படி சகுணம் பார்க்க வேண்டும் மனையில் சென்று நிற்கும் போது மண்ணில் காணப்படும் குறிகளைக் கவனிக்க வேண்டும். மண்ணின் இயல்பு குறித்து ஆராய வேண்டும்.

மனை அமைப்பதற்கு ஏற்ற மாதங்கள், நேரம் போன்ற காலங்களையும் சரியாக நிர்மானிக்க வேண்டும்.

கட்டிடங்களின் நீளம், அகலம் குறித்தெல்லாம் நமது முன்னோர்கள் விரிவான ஆராய்ச்சி நடத்தியிருக்கிறார்கள்.

ஒரு வீட்டின் நீள அகலங்கள் இன்ன அளவின்படி அமைந்தால் அதில் குடிபுகும் குடும்பத்திற்கு என்னென்ன விளைவுகள் ஏற்படும் என்றெல்லாம் விளக்கங்கள் தரப்பட்டு இருக்கின்றன புதுமனை நிர்மானம் செய்யும் போது இவற்றையெல்லாம் கவனித்தாக வேண்டும்.

வீட்டின் வாசல், யன்னல் எந்தெந்த திசையில் இருந்தால் அதில் வாசம் செய்யும் போது குடும்பத்தினருக்கு என்னென்ன விளைவுகள் ஏற்படும் என்பதையும் முன்னதாகக் கணித்துத் தெரிந்து கொள்ள வேண்டும்.

ஆகவே வீடுகள் நிர்மானம் செய்யும்போது நமக்குக் கிடைக்கும் வசதிகளைப் பற்றி மட்டுமே சிந்திக்காமல் அந்த வீட்டில் குடியிருக்கும் போது நமது வாழ்க்கை நிலை இன்பமயமாக இருக்க எத்தகைய அமைப்பில் வீடு இருக்க வேண்டும் என்றே அதிகமாக யோசிக்க வேண்டும்.

சிலர் புதிதாக வீடுகட்ட முற்படும் போது பெருஞ்செல்வந்தர்களாக இருப்பார்கள். ஆனால் வீடுகட்டி முடிப்பதற்குள் அவர்கள் ஒட்டாண்டிகளாகி தாங்கள் நிர்மானித்த வீட்டிலேயே குடியிருக்க முடியாத நிலை ஏற்பட்டு விடலாம்

ஆரோக்கியம் குன்றாத வாழ்க்கை நடாத்திக் கொண்டிருந்த சிலர் தாங்கள் நிர்மாணித்த புது வீட்டிற்கு குடிபோன சில நாட்களிலேயே ஆரோக்கியம் தொடர்ந்து கெட்டு பல உயிரிழப்புகளுக்கு ஆளாகி விடுவதும் உண்டு.

## வீடுகட்டும் யோகம் உடையோர் யார் ?

பரம்பரையாக வீடுவாசலோடு வாழ்பவரைத் தவிர தானே முயன்று வீடு கட்டிக் கொள்வதற்கான வாய்ப்பும் வசதியும் உடையவர் என்பதை அவரவர் ஜாதகத்தைக் கொண்டு கூறலாம்.

அடுத்ததைக் காட்டும் பளிங்கு என்பதைப் போல ஒருவர் பிறந்த நேரத்தின் அடிப்படையில் கணசகிடப்பட்ட ஜாதகம் அவருடைய குணநலன்களையும், உயர்வு தாழ்வுகளையும் செல்வச் செழிப்பு, வறுமையின் வாட்டம் போன்றவற்றையும் எடுத்து இயம்பும் வல்லமை உடையது.

**திரு. செ. யோகச்சந்திரன்**
அதிபர், சிதம்பரக்கல்லூரி

இனி யாருக்கு வீடு கட்டும் யோகம் உள்ளதென்பதை காண்போம்.

ஜாதகத்தில் 12 பாவங்களில் லக்னத்தை முதலாகக் கொண்ட 4 ஆம் பாவம் இந்த யோகத்தை (வீடு கட்டும் யோகத்தை) சுட்டிக் காட்டும்.

நவ நாயகர்களில் சுக்கிரன் இல்லத்திற்கு (கட்டிடத்திற்கு அதிபதி

செவ்வாய் நிலத்திற்கு அதிபதி, அதாவது மனைக்கு அதிபதி.

எனவே சொந்தமாக மனை வாங்கும் வீடு கட்டும் வாய்ப்புடைய ஜாதகர்களின் ஜாதகத்தில் 4 ஆம் வீடமும் 4 ஆம் இடத்திற்கு உரிய

வரும் உயர்வடைந்து செவ்வாயும் சுக்கிரனும் சிறப்புற்றிருந்தால்தான் தனக்கென இல்லத்தை வீட்டைக் கட்டிக் கொள்ளும் வாய்ப்பை அடைவர்.

மனை கட்டும் பொழுது நான்கு விடயங்களை கவனத்தில் கொள்ளல் வேண்டும்.

1. அடிப்போடுதல். 2 கிணறு கிண்டுதல் 3. நிலை வைத்தல் 4. மனைபுகுதல் இவற்றில் அடிப்போடுதலும், மனைபுகுகலும் முக்கியமானவையாகும். மிகச்சிறந்த காலம் உதய லக்கினம் ஸ்திரராசியாக அமைதல் நல்ல கிரகங்கள் கேத்திர கோணத்திலும் பாபிகள் 3, 6, 11ம் இடங்களிலும் அமைந்திருக்க வேண்டும். எட்டாமிடம் சுத்தமாக இருக்க வேண்டும். கதவு நிலைகளைப் பொருத்தும் பொழுதும் ஸ்திரராசி இலக்கினமாக அமைதல் வேண்டும். இதற்கு ரோகினி மிருகசீரிடம், உத்தரம், சித்திரை, அனுஷம், உத்தராடம், உத்தரட்டாதி சிறந்த நட்சத்திரங்களாகும். சுவாமி அறைக்குரிய வாசலை பின்வரும் திக்குகளில் வைப்பது சாலச் சிறந்தது

மகரம், ரிஷபம், கன்னி லக்கினம் - தெற்கு

கும்பம், மிதுனம், துலாம் லக்கினம் - மேற்கு

கடகம், விருச்சிகம், மீனம் லக்கினம் - வடக்கு

சிம்மம், தனுசு, மேடம் லக்கினம் - கிழக்கு

அடிப்போடுவதற்கு பின்வரும் நட்சத்திரங்கள் சிறந்தவையாகும். ரோகினி, மிருகசீரிடம், சித்திரை, அத்தம், கேட்டை, உத்தரம், திருவோனம், திங்கள், புதன், வியாழன், வெள்ளி சிறந்த நாட்களாகும். அடிப்போடும் சுப நேரத்தை பொறுத்து மனை பல நூற்றாண்டுகள் சுபீட்சத்துடன் வாழும். பின்வரும் கிரக நிலைகள் இதை நிலை நிறுத்தும்.

1. லக்கினத்தில் இருந்து சந்திரன் பத்தில், குரு நான்கில், செவ்வாய், சனி பதினொன்றிலும்

வியாழக்கிழமையும்' குரு, ரோகுனி, மிருகசீரிடம், ஆயிலயம் உத்தரம் பூரட்டாதி, உத்தரட்டாதி, திருவேணம் ஆகிய நட்சத்திரங்களுடன் தொடர்பு கொண்ட கிரகநிலை சிறந்த இராஜயோகத்தையும் பல்லாண்டுகள் மனை வளம்பெருக்கி சிறப்புடன் வாழக்கூடிய நிலையையும் கொடுக்கும் என கருதப்படுகிறது'

# இயற்கை வைத்தியக் கைமுறைகள்

**மட்டைத்தேள், ந(ண)ட்டுவக்காலி தேனீ குளவி**

1 இவைகளுள் ஒன்று கொட்டினால் முதல் உடனடியாக சுண்ணாம்பை பூசி பின்னர் ஒரு கத்தரிக்காயை நெருப்பில் மாட்டி அதைப் பிசைந்து கடிவாயில் வைத்து கட்டியதும் விஷம் இறங்கிச் சுகமடையும்.


2. நாயுருவி பூண்டின் குருத்தினை கசக்சி கடிவாயில் தேய்த்தால் குணமடையும்.

3. உருளைக் கிழங்கைக் கத்தியால் சீவி அதை அரைத்து கடிவாயில் வைத்து கட்டினால் சுகமடையும்.

4. சுண்ணாம்பையும் ஒட்டறையும் சேர்த்து குழைத்து கடிவாயில் பூசினால் சுகம் வரும்.

5. பெருங்காயத்தைநீரில் உரைத்து கடிவாயில் பூசினால் விஷம் இறங்கும்.

6. ஒரு சீலையில் மண்ணெண்ணெயில் நனைத்து கடிவாயில் வைத்துக்கட்டி அதன் மேல் சிறிது நேரம் சொட்டுச் சொட்டாக விட்டுக் கொண்டிருந்தால் விஷம் இறங்கிச் சுகம் காணும்.



7. கோழிக்காரத்தில் (கோழிக்காரம் என்றால் கோழியின் மலத்தின் மேல் வெண்மையாக இருக்கும் ஒரு வகைச்சாந்தாகும்) ஒரு நெல்லிக்காய் பருமனில் வெற்றிலையுடன் நன்கு சிறு உரலில் சாறுபிளியும் வரை இடித்துக் கடிவாயில் பூசினாலும் விஷம் இறங்கும்.

# நோய் தீர்க்கும் மூலிகை:

## ஊமத்தை இலை மூலிகை

செடி இனத்தைச் சேர்ந்த ஊமத்தை மேட்டு நிலங்களில் தோட்டங்களில் வீதி ஓரங்களில் காடுகளில் சாதாரணமாக வளரும்.

இது நம்புட்டான் பழம் போன்ற அமைப்பினைக் கொண்ட கூரான முள் அமைப்பினைக் கொண்டது. இதன் பூ வெள்ளை, மஞ்சல், நாவல் போன்ற நீண்ட கோண்வடிவினையும் பரந்த இலை அமைப்பினையும் கொண்டது.

இனங்கள்:- பொன் ஊமத்தை, கரு ஊமத்தை அடுக்கு ஊமத்தை மருள் ஊமத்தை என பல வகைகள் உண்டு.

இதன் இலை கைப்புத்தன்மையும் வெப்புத் தன்மையயும் கொண்டது.

## ஆஸ்துமா

ஆஸ்துமா நோயினால் அவஷ்தைப்படுவோர் இதன் இலையினை சுருட்டுப் போன்று காய வைத்து புகைக்கலாம். நோய் குறையும் வரை புகைத்தலை தொடரலாம், இலையின் அளவு விஷயத்தில் கவனம் தேவை. அதிக அளவினைப் பயன் படுத்தக் கூடாது.

## எலும்பு வீக்கம்

எலும்பு வீக்க கட்டியினால் வரும் வலி கீழ் வாய்வு போன்றவற்றிக்கும் தாய்மார்களுக்கு முலைப்பால் கட்டிக்கொள்வதால் ஏற்படும் வலி தெரிக்கட்டிகள் நீங்க இவ் இலையை நெருப்பில் வாட்டி சம்மந்தப்பட்ட இடத்தில் ஒத்தடம் கொடுத்தால் சுகம் தரும்.

## காது வலி

காதில் ஏற்படும் வலி நீங்க இவ்விலைச்சாறு சிறிது நல்லெண்ணையும் கலந்து காச்சி சாதாரண சூட்டோடு ஒன்று இரண்டு துளிகள் விட்டால் வேதனை நீங்கி வீக்கங்களும்மாறும்.

## நாய்க்கடி புண்

நாய் கடித்தபுண் மாறாமல் இருப்பின் இவ் விலைகள் சிறிது எடுத்து அரைத்து நல்லெண்ணையில் வதக்கி வைத்துக்கட்டி வந்தால் விரைவில் புண் மாறும்.

## மூலம் நோய்க்கு

இவ்விலைகள் சமநிறைக்கு அரிசிமா கலந்து சுத்தமான தண்ணீரால் தெளித்து வேகத்து களிமாதிரி( PASTE ) கிளறி மூலத்திற்கும் போட்டுவர குணமடையும்.

## நரம்பு மூட்டு வீக்கம்

இக்களியினை நரம்பு வீக்கம், மூட்டுவீக்கம் குணமடையவும் பயன்படுத்தலாம். (எக்காரணம் கொண்டும் புண் மீது பூசக்கூடாது)

## விசர் நாய்கடி விஷம் நீங்க

இவ்விலையின் சாறு இரண்டு துளி கொஞ்சம் சர்க்கரை சேர்த்து தொடர்ந்து மூன்று நாட்களுக்கு மட்டும் காலை மாலை உள்ளுக்கு சாப்பிட்டு வர விஷம் இறங்கி சுகம் கானும். பத்தியமாக உப்புச் சேர்த்துக் கொள்ளாமல் மதிய உணவாக தயிருடன் கலந்து சோறும் இரவு உணவாக பால சோறும் உண்ண வேண்டும்.

இத்தனை நோய்களுக்கும் ஓர் சஞ்சீவி மருந்து போன்றதே ஊமத்தை இலை

---

## சீனாவின் முதலாவது சக்கரவர்த்தி

கிறீஸ்துவிற்கு 300 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த சின்சி வறவாங்டி என்பவர் தான் சீனாவின் முதல் சக்கரவர்த்தி, இவரின் பெயரிலிருந்து தான் சீனா என்ற பெயர் ஏற்பட்டது இவருக்கு 13,140 மனைவியரும் 2,800 குழந்தைகளும் இருந்தனர். இவர் வசித்த அரண்மனை 10 000 அறைகளைக் கொண்டது. சீனாவிற்குள் பிறர் புகுந்து விடாதபடி மிகக்கடுமையான கட்டுக்காவலை ஏற்படுத்தி 1,500 மைல் நீளமான மாபெரும் சீனச் சுவரை எழுப்பியவரும் இவரே.

## டெலஸ்கோப்பை கண்டுபிடித்தவர்

டெலஸ் கோப்பைக் கண்டுபிடித்தவர் டச்சுக்காரரான விப்பர் ஷே என்பவர்தான், பின் இவரின் டெலஸ்கோப்பில் சில திருத்த வேலைகளைச் செய்து வடிவமைத்து சந்திர மண்டலத்தில் கலிலியோ இருப்பதைக் கண்டு பிடித்தவர் கலிலியோ. இவரின் டெலஸ் கோப்பில் மேலும் மாற்றத்தைச் செய்து ( Refing ) வடிவமைத்தவர் நியூட்டன் ஆவர்.

எனவே இம் மூவரின் கூட்டமைப்பே தற்போதைய டெலஸ் கோப்பாகும்.

---

**வீணாகப் பாவிக்கும எரிபொருள் — அது நிச்சியம் தோற்றிடும் காரிருள்!**

# நாரதரால் முடியாதது......!

நாரதர் ஒரு சமயம் வைகுண்டத்திற்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தார். அப்போது ஒரு பக்தன் அவரை வழிமறித்தான். நாரதருக்கு காரணம் புரியவில்லை. என்னை ஏன் வழிமறிக்கிறாய் என்றார் நாரதர்.


அதற்கு அந்த பக்தன் தனக்குக் குழந்தை இல்லாத குறையை கூறினான். குழந்தைப் பாக்கியத்தைப் பகவானிடம் பெற்று வந்து தனக்கு அருளும்படி வேண்டினான். சரி என்று ஒப்புக் கொண்ட நாரதரும் வைகுண்டம் சென்று உடன் பகவானிடம் தன் பக்தனின் குறையைக் கூறினார்.

இந்தப் பிறவியில் அவனுக்கு மகப்பேறு இல்லை என்று கூறிவிட்டார் பகவான். நாரதரும் அச் செய்தியைப் பக்தனிடம் கூறிச்சென்று விட்டார்.

வருடங்கள் பல உருண்டோடின. அதே பக்தனின் தெரு வழியே நாரதர் ஒரு நாள் செல்ல வேண்டியிருந்தது. அப்பக்தனின் வீட்டிற்கு முன் ஐந்தாறு குழந்தைகள் விளையாடிக் கொண்டிருந்தன. நாரதருக்கு ஒரே ஆச்சரியம். இக்குழந்தைகள் யாருடையது என்று விசாரித்தார். அப்பக்தனின் குழந்தைகள் தான் அவர்கள் என்று அறிந்த போது பகவானின் மீது நாரதருக்கு அளவற்ற கோபம் ஏற்பட்டது.

நேரே புறப்பட்டார் வைகுண்டம் நோக்கி பக்தனுக்கு இப்பிறவியில் குழந்தை பாக்கியம் இல்லை என்றீர்களே! எப்படி இப்போது மட்டும் அப்பாக்கியத்தைப் பெறமுடிந்தது. அப்படியானால் தங்கள் கூற்று பொய்யா? என்று கோபமாகக் கேட்டார் நாரதர்.

அதற்கு பகவான் "அந்தப் பக்தரிடமே சென்று மகப்பேறு உண்டானதற்குக் காரணம் கேட்டறிக" என்றார்.



நாரதரும் பக்தனிடம் விசாரித்தார் அதற்கு பக்தன் நாரத முனியே ஒரு சமயம் சிறந்த அடியார்கள் சிலர் என் இல்லம் வந்தனர். அவர்களை நான் நன்கு உபசரித்தேன், அவர்கள் புறப்பட்டுச் செல்லும் போது மகப்பேறு உண்டாக அருள் பாலித்தனர் என்றான்.

பகவானைக் காட்டிலும் அடியவர்களுக்கு அத்தனை உயர்வா என்ற ஐயத்துடன் வைகுண்டம் சென்றார் நாரதர். பகவானும் புன்முறுவலுடன் நாரதரை வரவேற்றார் அவர் ஐயத்தைப் போக்கும் வகையில் தாம் நியதிக்கு மீறி எதையும் செய்ய இயலாதென்றார் ஆனால் அடியவர்கள் அனைத்தும் அருளும் பேராற்றல் பெற்றவர்கள் என்றும் அவர்கள் அருள்பாலிப்பதைத் தான் தடுக்க இயலாதென்றும் கூறினார்.

பிறகு தான் நாரதருக்கு உண்மை விளங்கியது.

— சுபா —

## முட்டையின் அளவை அதிகரிக்க வெங்காயம்

சிறு துண்டுகளாக்கப்பட்ட வெங்காயத்தை முட்டையிடும் கோழிகளுக்கு போட்டால் கோழி வளர்ப்பில் பல நன்மைகள் உண்டாகின்றன.

பிலிப்பைன்சில் உள்ள பலாவன் தேசிய விவசாயக் கல்லூரியில் நடாத்தப்பட்ட ஆய்வின் போது கோழிகளுக்கு வெங்காயத்தை சிறு சிறு துண்டுகளாக்கி உணவாக கொடுக்கப்பட்டது. இதன் பலனாக 5 வித நன்மைகளைக் கண்டு பிடித்தார்கள்.

அவை 1) கோழிகள் முட்டையிடும் தொகை அதிகரிக்கும். 2) முட்டை நிறைகூடும் 3) சிறந்த மணத்தைக் கொடுக்கும். 4) முட்டைக் கோது தடிப்பாகும். 5) கோழிகளின் பசித்தன்மை அதிகரிக்கும். ஆராச்சியின் போது நூறு கோழிகளுக்கு 30 கிராம் வீதம் வெங்காயம் கொடுக்கப்பட்ட போது நாளொன்றுக்கு முட்டையிடும் வீதம் முறையே 79.5% ஆகயிருந்து அவதானிக்கப்பட்டது இதே வேளை 20 கிராம் 10 கிராம் வெங்காயம் கொடுக்கப்பட்ட போது முட்டையிடும் வீதம் 77.3% 73% ஆக இருந்தது. வெங்காயம் கொடுக்கப்படாத போது முட்டையிடும் வீதம் 72.4% ஆக இருந்தது மேற்படி மூன்று வீத நிறைகளில் வெங்காயம் கொடுத்த போது முட்டையின் சராசரி நிறை முறையே 55.2% 54.1% 53.7% ஆக இருந்தது இதே நிலையில் வெங்காயம் கொடுக்காத போது முட்டையின் நிறை 53·7% ஆகவே இருந்தாக தெரியப்பட்டது.

## பாதை தெரியாத பயணங்கள்:

வட பகுதி பயணிகளிற்கோர் முக்கிய அறிவித்தல். இன்னும் சில நிமிட நேரங்களில் யாழ் புகையிரத வண்டி வவுனியா நோக்கி புறப்படவுள்ளது !! அறிவிப்பைத் தொடர்ந்து இடம் பிடிப்பதற்காக பயணிகள் முண்டியடித்து புகை வண்டியில் ஏறி அமர்ந்தனர். பயணிகளின் அமளிதுமளிகலோடு வண்டி புறப்படுகின்றது. முருகேசு வாத்தியாரும் கொண்டு வந்த பொதிகளை தனது இருக்கையிற்கு மேலுள்ள பகுதியில் வைத்து விட்டு யன்னலோரமாக நீண்ட பெருமூச்சொன்றை விட்டவாறு பார்வைகளை ஓட விடுகின்றார்.

மார்கழி மாதத்து பனிக்குளிர் குப்பென பட்டு அவர் முகத்தை உறைய வைக்கின்றது '' பெரியவர் '' விடியுறதுக்கு இன்னும் அரைமணி நேரம் இருக்கிறது ஜன்னல் கதவை இழுத்து மூடிப் போட்டு இருங்கோ ! முருகேசு வாத்தியாருக்கு அருகினில் இருந்த நடுத்தர வயது ஆசாமி ஒருவர் கூறிவிட்டு கழுத்து வரை போர்த்தியிருந்த போர்வைக்குள் தனது தலையையும் இழுத்து வைக்க முற்படுகின்றார்.

அந்த பெட்டியில் இருந்த அனைவரும் ஜன்னல் கதவுகளை பூட்டி விட்டு குளிர் தடுப்பு ஆடைகளால் தங்களை சமாளித்த வண்ணம் கண்ணை மூடி நித்திரா தேவியை ஆனந்தமாக வரவழைத்துக் கொண்டிருந்தார்கள். முருகேசு வாத்தியாரும் மற்றவர்களைப் போல கண்ணை மூடிப் பார்க்கிறார் .. .. .. தூக்கமாவது ....... மண்ணாங்கட்டியாவது என்பது போல அவரின் கண் இமைகள் மூட மறுக்கிறது

'' டடக் ''...... ... '' டடக் '' ...... ... 'டடக்' '' டடக் '' என்று ஒரு வித ராகங்களுடன் ரயிலின் சில்லு தண்டவாளங்களுடன் ஒட்டி உரசிக் கொண்டு வரும் சத்தம் அவரின் நித்திரையையும் நினைவுகளையும் கிழித்தெறிகின்றது

அரிசி விற்கின்ற தங்கம் முருகேசு வாத்தி வீட்டு வாசலில் நின்று சத்தம் போட்டு கத்திக் கொண்டிருந்தான்.

மனுசனுக்கு ரோசம் வேணும் ! சொன்னா சொன்ன நேரத்திற்கு காசை கொண்டு வந்து தர வேணும். சீட்டுக் காசு தர வக்கில்லை பிறகு ஒரு வேட்டியும் சேட்டும் அதையும் கழட்டி எறிஞ்சு போட்டு பள்ளிக்கூடத்திற்கு போக வேண்டியதுதானே. '' த்தூ '' என வாசலின் முன்பு காறி உமிழ்கின்றாள் தங்கமாச்சி,

வீட்டுக்குள்ளிருந்து ஏச்சுக்களை கேட்டுக் கொண்டிருந்த முருகேசு வாத்தியார் தனது கிழிந்த வேட்டியை மடித்து கட்டிக் கொண்டு அரிசிக்கார தங்கத்தின் முன் அழாத குறையாக வந்து நின்றார்.

'' தங்கமக்கா '' ...... ... வாற இருபத்தி ரெண்டாம் திகதி மட்டும் பொறுத்துக் கொள் .. இப்ப கையில மடியில ஒண்டும் இல்லை ... .. இப்படி கண்டபடி வீட்டு வாசலிலே நின்டு கத்தினால் . நாலு பேருக்கு காதில விழும் பிறகு என்னை தப்பா நினைப்பினம் இந்த முறை கொழும்பு போய் விட்டு வந்த பிறகு எப்படியும் உன்ர சீட்டுக்காசை குடுத்துடுறன்.

தங்கத்தில் காலைப் பிடித்து கெஞ்சாத குறை ! இந்த இருபத்திரெண்டாம் திகதி தான் கடைசி தவணை. வட்டிக் காசையும் சீட்டுக் காசையும் இருபத்திரெண்டாம் திகதி கொண்டு வந்து தரல்ல ... பிறகு இந்த அரிசிக்கார தங்கப தங்கமாக இருக்கமாட்டாள் ஓம் ! என்றவாறு அலட்சியம் கலந்த ஆவேசத்தோடு அரிசிக் கடகத்தை தூக்கி தலையில் வைத்தபடி கிளம்பி விட்டாள்.

# மீண்டும் மீண்டும்

சமூகத்தின் மத்தியில் ஆசிரியர் என்ற அந்தஸ்து இருந்தாலும் இந்தஒய்வூதிய வயதிலும் அடுத்த வேளைக்கு என்ன என்பதை எதிர் பார்த்து நிற்க வேண்டிய நிலைமை.

மூத்த பெண்ணை எப்படியோ கௌரவமாக கரை சேர்த்து விட்டார். இருபத்தியெட்டு வயதாகியும் அடுத்த குமரின் எதிர்காலம் முற்றாக வளம் பெறாமல் இருப்பதினாலும் வீட்டு கஷ்டத்தைப் பார்க்க சகிக்காலும் மூவெட்டைத் தொட்டு தொட்டு நின்ற இளைய மகள் இயக்கத்துக்கு போய் தன்னை இலட்சிய பாதையோடு இணைத்து விட்டாள். பட்டப்படிப்பில் இறிதியாண்டு படித்துக் கொண்டிருந்த இளைய மகனோ இந்திய ஆமியின் துப்பாக்கி சன்னத்துக்கு இறையாகி விட்டான்.

எடுக்கும் ஒய்வூதியமும் ..... போதாமையால் இருந்த சிறு தொகைப் பணத்தையும் சேர்த்து சில மாதங்களாக கொழும்பு வியாபாரம் செய்து வருவதால் ஏதோ குடும்பம் என்று ஓடிக் கொண்டிருக்கிறது. முருகேசு வாத்தியிற்கு பின்பு கொழும்பு வியாபாரத்தில் ஈடுபட்ட சிலர் கூட எப்படியோ ... .. முன்னேறி பெரிய பணக்காரர்களாக இல்லாவிட்டாலும் குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய வசதியாளர்களாக மாறி விட்டிருந்தனர். எல்லாம் தடை முகாமில் நிற்கும் இராணு

வத்திற்கு மறைமுக ஆதரவு கொடுப்பதால்தான் என்பதை அவரும் அறியாமல் இல்லை.

தலைக்கு மேல படிச்சிருந்தும் என்ன .....? சந்தர்ப்பத்தை பயன்படுத்த தெரியாத ..... ... '' லூசு " வாத்தியெல்லே .... உது . என்று இவருடன் கூட செல்லும் சக வியாபாரிகள் ஏளனமாக கதைப்பது அவர் காதில் விழாமலும் இல்லை.

எல்லாம் நல்ல படியாகத்தானே ..... அமைஞ்சுது பணம் ஒன்று குறுக்கிட்டதனால தானே..... சின்னவளின்ர கல்யாணம் நிண்டு போச்சு. வயது போய் விட்ட இந்த கடைசிக் காலத்திலயும் இப்பிடி கஷ்ட்டப்பட்டுச் சம்பாதிக்க வேண்டியிருக்குது. மயிலிட்டி பக்கம் எத்தனையோ வசதிகளோட இருந்து ..... .. '' இண்டைக்கு இடம் பெயர்ந்த அகதிகள் " என்று முத்திரை குத்தப்பட்டு ..... ஒதுங்கி . வாழ்ந்தாலும் .. இந்த சனத்துக்கு முன்னால் ...... கூனிக் குறுகி வாழவேண்டிய நிலையை எண்ணும் போது... ... முருகேசு வாத்தியாரின் மனதில் வேதனை மேல் வேதனை தான் ஓடி வந்தது. காசு ஒன்றிலேயே குறியா இருக்கின்ற சனங்கள்.

சீசீ...... .. இப்படி ஒரு நிலலமை வரக்கூடாது. மற்றவனைப் போல நானும் ஆமிக்கு என்னால் இயன்ற உதவி செய்தால் என்ன .... என்ற நப்பாசையும் தோன்றி மறைந்தது.

விரைந்து சென்ற முருகேசு வாத்தியாரின் நினைவுகளோடு ரயிலும் ஒரு வழியாக வவுனியா வந்து சேர்ந்தது. வழமையான சோதனை சாவடிகளில் நின்று கொண்டிருந்தார் முருகேசு வாத்தியார். முன்னும் பின்னுமாக பல பயணிகள் வரிசையுடன் நின்று கொண்டிருந்தனர்.

'' ஐயா பெரியவர் ''...... என்று குரல் வந்த திசையை பார்த்தார். இராணுவ அதிகாரியுடன் திடகாத்திரமான ஒரு இளைஞன் நின்று புன்னகைத்துக் கொண்டிருந்தார்.

இப்படி வாங்கோ..... என்று முருகேசு வாத்தியை சோதனை சாவடிக்கு அப்பாலுள்ள அறை ஒன்றிற்குள் கூட்டிக் கொண்டு போனான் அந்த இளைஞன். தன்னைப் போல வியாபாரிகள் ......... சிலர் அந்த அறைக்குள் இருந்து ஏதோ குழைந்து நெளிந்து ஆமி பெரியவனுடன் சிரித்து கதைத்துக் கொண்டிருந்தனர். சொன்ன தொல்லாம் சரியா செய்ய வேணும் .... ஓகே ...... என்று தமிழை கொலை செய்யாமல் செய்து தமிழில் கட்டளை இட்டு அவர்களை வெள்யே போகுமாறு பக்கத்தில் நின்ற இளைஞரிடம் கூறி விட்டு வெளிய்ய போய் விட்டான் ஆமி கொமாண்டர்.


கொமாண்டர் சொன்ன வேலையளை கச்சிதமாய் செய்தியலெண்டால் ........ அடுத்த முறை வரயுக்கிளை உங்களுக்கு நிறைய சலுகைகளை கொமாண்டகிட்ட சொல்லி நான் ஏற்படுத்தி தருவன் என்று கூற பக்கத்திலிருந்த மூவரும் அதை ஆமோதிப்பது போல தலையை ஆட்டினார்கள். இளைஞன் பார்வை முருகேசு வாத்தியாரின் பக்கம் திரும்பின. '' வாத்தியார் " என்னை தெரியலையோ .....? என்றவாறு அவன் முன்னால் வந்த அந்த இளைஞனை உற்றுப் பார்த்தார்.

தம்பி நீர் .... எங்கட சின்னப்பிள்ளையின்ற மூத்த மோனெல்லே.

'' ஓமோம் வாத்தியார் ' இப்ப இஞ்சதான் வேலை செய்யுறன். உங்களோடை முக்கிய அலுவல் கதைக்கத்நான் என்ர பிரெண்டிட்ட சொல்லி கூப்பிட்டனான்.

என்ன தம்பி சொல்லுங்கோ ..!

உங்கட குடும்பம் சரியா கஷ்டப்படுதெண்டு உங்களோடை யாவாரம் செய்யுறவியல் சிலபேர் சொன்னவியள். எனக்கு உங்களிட்ட படிச்ச மாணவன் எண்குறதாலயும் .. .. நானும் வடமராச்சியான் என்கிறதாலயும் .. .. மனம் கேக்கல்ல . அதுதான் மாஸ்டர் என்னால இயன்ற உதவி செய்யலாமெண்டு .....



என்ன தம்பி செய்யுறது .... எத்தனையோ வசதியளோடை நான் படிப்பிச்சு கொண்டிருந்ததை நீரும் அறிஞ்ச விசியம் தானே, இப்ப இடம் பெயர்ந்து போனதாலையும் பென்சனியராகிவிட்டதாலும் அகதியோட அகதியா... ..... அல்லல்பட்டு பஞ்சத்தோடு போராட்டம் நடத்துறன்.

அது சரி உங்கட குடும்பம் எப்படி இருக்கு ?

ஊரில சரியா கஷ்டப்பட்டனாங்கள். இப்ப நான் இஞ்ச வந்தாப் போல சகல வசதிகளோடையும் இருக்கிறம். என்ர தம்பி ரெண்டு பேரை கனடாவிற்கு அனுப்பி போட்டன். அக்காக்களும் கலியாணம் கட்டிப் போட்டினம், கொழும்பில் '' லொட்ஜ் '' ஒண்டு நடத்துற

துக்கு அத்தானுக்கு கொஞ்சம் உதவி செய் திருக்கிறன், அவயளும் நல்ல வசதியாககொழும் பில இருக்கினம். என்று முருகேசு வாத்தியாரின் தோளில் கைபோட்டவாறு கூறினான் அந்த இளைஞன்.

ஊரில கால் றாத்தல் பாணுக்கு வழியில் லாத இவன் குடும்பத்தையும் தனது தோளில் கைபோட்டு அலட்சிய பெருமையோடு கதைத் ததும் முருகேசு வாத்தியாருக்கு என்னவோ போல் இருந்தாலும் வெளிக்காட்டிக் கொள்ள வில்லை.

மாஸ்டர் நீங்கள் இனிமேல் ஒண்டுக்கும் யோசிக்க வேண்டாம். நாங்கள் தாற இந்த பார்சலை பெடியள் மாவீரருக்கு கூட்டம் நடத் துற மேடைக்கருகில் எங்கையாவது வையுங்கோ அதில ஒரு சிவப்பு ஆணி இருக்கு. அதை கறுப்பு அம்புக்குறி போட்ட பக்கம் திருப்பி விட்டால் சரி. இவ்வளவுதான் நீங்கள் செய்ய வேண்டும். உங்களை எண்டால் புலிகளுக்கும சந்தேகம் இராது.

அடுத்த முறை வரயுக்கை பெரியகொமாண் டரிட்ட சொல்லி காசும் வேண்டித்தாரன் இப்ப தைக்கு இதை வச்சிருங்கோ என்று முருகேசு வாத்தியாரின் கைக்குள் ஒரு தொகை பணத்தை யும் திணித்து விட்டான்.

முருகேசு வாத்திக்கு பணத்தையும் பார்ச லையும் பார்த்ததும் உடல் வியர்த்தது. இருதய துடிப்பு அதிகரித்தது வேறு யாராவது பார்த்து விடப் போகிறார்களோ என்று தனது உடுப்பு பாசலுக்குள் எடுத்து பத்தரமாக வைத்து விட்டார். முருகேசு வாத்தியார்

சுற்று முற்றும் பார்த்தார் வாத்தியார். நல்லவேளை தன்னுடன் வந்த வியாபாரிகள் எவருமில்லை.

இந்த அறுபது வயது சேவீஸ்வரைக்கும் எத் னை குழந்தையளின்ற எதிர்காலததை ஒளிமய மாக்கியிருப்பன் எத்தனை சமூக சேவையளை முன்னுக்கு நின்று நடத்தியிருப்பன். எல்லாம் எங்கட நாட்டின் நன்மை கருதி செய்திருக்கிறன்.

இந்த வெடிகுண்டு பாசாலால்.... இத் தினை நன்மையான காரியங்களையும் ஒரு செக்கனுக்குள்ள இழந்து விடுவமோ .....— என்ற பயமும் முருகேசு வாத்தியாரை பிடித்துக் கொண்டது.

வீட்டு வாசலில் அரிசிக்கார தங்கம் கத்தியது நினைவிற்கு வந்தது. வெறும் காதோடு மனை வியும் மகளும் கோயில்குளங்களுக்கென்று வெளி யில் போய் உலாவி வரககூட முடியாமல் வீட் டிற்குள்ளேயே முடங்கியிருபபதும் மனதிலே பட மாக ஓடியது.

ஈடு வைத்த காணி, வீட்டில் முடங்கி இரு க்கும் இருபத்தியெட்டு வயதான மகளின் எதிர் காலம். கைமாத்தாக கடனாக...... வேண்டிய பணங்கள் எல்லாம் சட்டென்று தோன்றி மறைந் தன.

இதெல்லாம் மாறவேண்டுமானல் நேர்மை யான மனதை கொஞ்சம் தளர்த்தத்தான் வேணும். தளர்த்திக் கொண்டால் யாருக்கு தெரி யப் போகுது. அப்படி செய்தாலும் மற்ற வியா பாரியள் யார் தான் பாதகம் செய்யவில்லை? ஏதோ ஒரு விதத்தில தீங்கு செய்து தானே தடை செய்யப்பட்ட இவ்வளவு பொருளையும் இலகுவாக கொண்டு வந்து சேர்க்கினம்.

இந்த முறை ஒரு தரம் செய்தால் என்ன? என முடிவெடுத்து விட்டாலும் ...

வயது போய் சாகப்போற எங்களை சுதந்தி ரமாக தலை நிமிரச் செய்யுறதுக்கு..... வாழ வேண்டிய இளங் குருத்துக்கள் தங்களை ஆகுதி ஆக்கி மண்ணுக்குப் பெருமை தேடித் தந்த அந்த செல்வங்களை அவர்கள் துயிலும் இல்லத் தில நடக்கிற புனிதமான ... அந்த நவம்பர் 27 தினத்தில். இந்த குண்டை வைப்பதென் றால்..... முருகேசு வாத்தியாரின் நெஞ்சம் நடுங்கின்றது ''ச்சி'' இந்த அற்ப பணத்துக் காகவும் கொஞ்ச சலுகைக்காகவும் இப்படி கீழ்த் தரயான செயல்களை செய்வதற்கு துணிந்துவிட் டோமே என்று யோசித்த வண்ணம் கலங்கினார் தயங்கினார் முருகேசு வாத்தியார்.

மாஸ்டர் ஒண்டுக்கும் யோசியாதேயுங்கோ நாங்கள் இருக்கிறம் எங்களுக்கு துணையா ஆமி இருக்கிறாங்கள். அப்படி புலிகள் உங்களுக்கு கரைச்சல் தந்தால் இஞ்ச வாங்கோ இருக்கிற துக்கு வீடு ஒழுங்கை பண்ணித்தாறம் 'டோன்ற் வொறி மாஸ்டர்"

மச்சான் .... மாஸ்டருக்கு கூலா ஒரு சோடா கொண்டு வாடாப்பா என்று பக் கத்தில் நின்றவனிடம் கட்டளை இட்டான் அந்த சின்னப்பிள்ளையின் மகன்.

தம்பி இந்த பணத்தோடையும் பார்ச லோடையும் போக பயமா இருக்கு ...

டோன்ற் வொறி மாஸ்டர் நாங்கள் இருக்கிறம் அடிக்கடி வாங்க என்று சின்னப் பிள்ளையின் மகனின் பக்கத்தில் வந்து கொண் டிருந்த கொமாண்டர் மாஸ்டருக்கு தைரியம ஊட்டி தங்கு தடையில்லாமல் தண்டிக்குள சோதனை முகாமிலிருந்து முருகேசு வாத்தியை வெளியே அனுப்பினார்கள். புலிகளின் எல்லைக் குள் வந்தார்.

ஐயா உங்கட பொதிக்குள்ள இந்தப்பாசல் இருந்ததாலயும்...... பாசல் விபரங்களை எங்க ளுக்கு வெளியிடததாலும் தேச விரோத வரிசை

யிலே கைது செய்கிறம். இதில நிற்கிற மக்களுக்கு முன்னாலேயே அதுக்குரிய தண்டனையை தரப் போறம்.

ஐயோ ..... முருகா ..... தம்பி .. மோனே . இப்பிடியான காரியத்தை ஒரு நாளும் செய்ய மாட்டன் எனக்கு உயிர்ப்பிச்சை தாருங்கோ ... என்னை நம்பி ரெண்டு உயிர் வீட்டில இருக்கு என்னை மன்னிச்சு கொள்ளுங்கோ முருகா ...... முருகா வன்னி மரத்தானே !

பெடியள் மரண தண்டனையை நிறைவேற் றத் தயாராய் இருந்தார்கள். முருகேசு வாத்தி அலறிப் புடைத்துக் கொண்டு புலம்பினார்.

மாஸ்டர் ... என்ன யோசிச்சுக் கொண்டி ருக்கிறியள் என்று ஏதோ சிந்தனையோடு புலம் பிக் கொண்டிருந்த முருகேசு வாத்தியாரின் நினைவுகளை திருப்பினான் சின்னப்பிள்ளையின் மகன்.

வனத்தில வாழ்ந்தாலும் இனத்தோட சேர்ந்து வாழ வேணும் நான் அகதியா இடம் பெயர்ந்து இருந்தாலும்... . பெடியளின்ர சட் டுப்பாட்டு பகுதியில் இருக்கிறதால ஒரு வித சுதந்திரமா இருக்கிறன் ராசா தயவு செய்து என்னால இந்த காரியத்தை செய்ய முடியாது தம்பி ... என்றவாறு வெடிகுண்டு பார்சலை தனது பொதிக்குள் இருந்து வெளியே எடுத்து வைத்தார்.

அவ்வளவு தான் ..... படித்த மாணவன் உட்பட பக்கத்தில் நின்றவர்கள் முருகேசு வாத் தியை நையப்புடைத்து அனுப்பி விட்டார்கள். தாண்டிக்குள முகாம் சோதனை சாவடியை விட்டு வெறும் கையுடன் வருகின்றார். அவர் மனக்கண் முன் அரிசிக்கார தங்கமும் இருபத் தெட்டு வயது மகளும் மனைவியும் தோன்றி மறைகிறார்கள்.

அவர் பொதிகள் பறி போனாலும் பொன் எழுத்துக்களால் பொதிக்கப்படும் மாவீரர்களின் கல்லறைகள் அழிவிலிருந்து காப்பாற்றி விட் டோமென்ற பெருமையுடன் புலிகளின்சோதனை சாவடிக்கு வீறு நடை போடுகின்றார்.

முற்றும்

**— பொலிகை யோகு**

## பொது அறிவு என்றும் பிரகாசிக்கும்!

1. உலகின் பெரிய குடாநாடு — அரேபியா
2. இலங்கையில் மிகக் குளிரான இடம் — கந்தப்பளை
3. தென்னாபிரிக்க ஜனாதிபதி — நெல்சன்மண்டேலா
4. உலகின் மிகப் பெரிய தங்கச்சுரங்கம் உள் ளது — ஆபிரிக்காவில்
5. சூயஸ் கால்வாய் திறக்கப்பட்ட ஆண்டு — 1869
6. மாலைதீவின் தலைநகர் — மாலே
7. கிறிஸ்தவர், யூதர், முஸ்லீம்கள் ஆகிய 3 சமயத்தவர்களின் புனித நகரம் எனக் கொண்டாடுவது — ஜெருசலேம்
8. இந்திய அரசின் தேசியப்பறவை — மயில்
9. சீனப் பெருஞ்சுவரின் நீளம் — 2150 மைல்
10. ஐ. நா. சபையின் உறுப்பு நாடுகளின் எண்ணிக்கை — 184 (கடைசியாக சேர்ந்த நாடு எரித்தியா)
11. அமெரிக்காவுக்கு சுதந்திர தேவியின் சிலையை அளித்த நாடு — பிரான்ஸ்
12. உலகில் தமிழ் பேசும் மக்கள் தொகை — 63 மில்லியன
13. உலகில் அகிம்சை வழியில் உண்ணாவிரத மிருந்து இறந்தவர் வட அயர்லாந்து நாட் டைச் சேர்ந்த பொபி சான்டஸ். இவர் அந் நாட்டு பாராளுமன்ற உறுப்பினர். அந்நாட்டு வல்லாதிக்கத்திற்கு எதிரான போராட்டத்திற்காகவே இவ்வழியை தேர்ந்தெடுத்தார்
14. டென்மார்க்கில் இருந்து அமெரிக்காவுக் குப்போய் 1வது அணுகுண்டு தயாரிக்க உதவியர் — நீல்போர்
15. தீவுகள் அதிகம் உள்ள சமுத்திரம் — பசுபிக்
16. நபிகள் நாயகம் பிறந்த ஆண்டு — கி மு 570
17. அமெரிக்காவின் சின்னம் ஆகவுள்ள பறவை — மொட்டைக் கழுகு
18. உலகில் சிங்களம் பேசும் மக்கள் தொகை — 12 மில்லியன்
19. உலகிலுள்ள மொத்த நாடுகளின் எண் ணிக்கை — 224
20. உலகின் முதலாவது பெண் பிரதமர் — திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா
21. பாகிஸ்தானின் முதல் பெண் பிரதமர் — பெனாசீர் பூட்டோ

22. நெல்சன் மண்டேலா அனுபவித்த சிறை வாசம் — 28 ஆண்டுகள்

23. ஜே. ஆர். ஜெயவர்த்தனா முதல் ஜனாதிபதியாகப் பதவியேற்றது — 04 - 02 - 1978

24. ஐ. நா. செயலாளர் பிறந்த நாடு — எகிப்து

25. தமிழீழ விடுதலைப் புலிகளின் வேலுப்பிள்ளை பிரபாகரன் பிறப்பு — கார்த்திகை 26

26. தமிழீழ மாவீரர் தினம் — கார்த்திகை 27

27. 1ம் அணுகுண்டு போடப்பட்ட இடம் திகதி — குரோஷிமா 06 - 08 - 1945

28. அமெரிக்காவில் அடிமுறை ஒழிக்கப் பாடுபட்ட ஜனாதிபதி — ஆபிரகாம்லிங்கன்

29. கொலம்பஸ் மேற்கிந்திய தீவுகளைக் கண்டு பிடித்தது — 1492

30. 2ம் அணுகுண்டு போடப்பட்ட இடம் திகதி — நாகசாக்கி 09 - 08 - 1945

31. கிட்லர் சர்வாதிகாரி ஆனது — 1934

32. 1ம் இந்திய கவர்னர் ஜெனரல் — ராஜ கோபாலச்சாரியார்

33. 1941 இல் ஜப்பானியர் தாக்கிய அமெரிக்க துறைமுகம் — போர்ல் உறாபர்

34. தபால் முத்திரையில் தனது பெயரைப் பொறிக்காத நாடு — இங்லாந்து

35. இமய மலையில் முதல் முதல் கொடிநாட்டப்பட்டது — 1953

36. சர்வதேசக் குழந்தைகள் ஆண்டு — 1979

37. பி. ரி. ஐ செய்தி ஸ்தாபனம் இயங்கும்நாடு — இந்தியா

38. முதலில் மனிதன் அறிந்த உலோகம் — செம்பு

39. 10 வது மகாநாட்டில் கலந்து கொண்ட நாடுகள் — 106

40. உலகில் அகிம்சை வழியால் உண்ணாவிரத மிருந்து மரணமடைந்த முதல் பெண்மணி தமிழீழ மட்டைக்களப்பைச் சேர்ந்த திருமதி கணபதிப்பிள்ளை பூபதி. இவர் இருந்த நாட்கள் 30. இவர் இந்திய இலங்கை வல்லாதிக்கங்களுக்கு எதிராக இவ்வழியை தேர்ந்தெடுத்தார்

தொடரும்

பாவை

முத்திங்கள் அறிவு மலர்

ஆசிரியர் : ஈழத்தீபன்

வளர்கலை மன்றம் சார்பில் வெளியிடுபவர் - திரு. சி. சுந்தரலிங்கம்

★ தொடர்புகளுக்கு :-
தலைமையகம்: நாத்திராவத்தை. வன்னிச்சி கோவிலடி, வல்வெட்டித்துறை.

உப செயலகம் :- தேவி இல்லம், பத்தியவத்தை, வதிரி மேற்கு, கரவெட்டி.

## ஆக்கங்கள் வரவேற்கின்றோம்

தமிழீழ மக்கள் அனைவர்க்கும் என்றும் தேவையான ஆக்கங்களை '' பாவை '' வரவேற்கின்றது.

மறு இதழ் முதல் பாடசாலைகளின் வரலாற்றுக் கட்டுரைகள் வெளிவரவிருக்கின்றன. பாடசாலை அதிபரின் முத்திரையுடன் ஒப்பமிட்டு. புல்ஸ்காப் பேப்பரின் இருபக்கத்திற்கு மேற்படாமல் பாவையின் முகவரிக்கு இம்மாதமே அனுப்பி வையுங்கள்.

ஆ-ர்

## முகப்பில் தோற்றம் செல்வி. ஜெ. பிரபா அவர்கள் ராதையாக ஓர் அபிநயத் தோற்றம்

வல்வை ஜெயரட்னம் - இந்திராணி தம்பதிகளின் அருந்தவப்புதல்வியாவார்.

இவர் வல்வை கணபதி பாலர் பாடசாலையின் கைதேர்ந்த நர்த்தன மாணவிகளில் ஒருவரும் மேற்படி பாடசாலை பரிசளிப்பு விழாவில் பல பரிசுகளை பெற்ற மாணவியும் ஆவர்.

'பாவை'

## நன்றி

'' நங்கூரம் '' சமூக அறிவியல் சஞ்சிகைக்கு 'பாவை '' முத்திங்கள் அறிவு மலரின் நன்றி.

எமக்கு சில அச்சுருக்களைத் தந்துதவிய '' நங்கூரம் '' ஆசிரியர்க்கு நிர்வாகத்திற்கு '' பாவை '' நன்றி கூறுகின்றது.

## கண்ணன் வீடியோ சென்ரர்

ரீவி, டெக் ஜெனரேற்றர்
தரமான வீடியோ நாடாக்களை வாடகைக்கு விடுவதுடன்
வீடியோ நாடாக்களில் நல்ல முறையில்
ஒளிப்பதிவு செய்தும் கொடுப்பவர்கள்
"கண்ணன் வீடியோ சென்ரர்" ஸ்தாபனத்தினரே

## டயானா சிறு திரையரங்கம்

தமிழீழத்தில் தயாரிக்கப்படும்
அனைத்து வீடியோ திரைப்படங்களையும்
உடனுக்குடன் பார்த்து மகிழ்ந்திட
சிறந்த திரையரங்கம்
"வல்வை டயானா சிறு திரையரங்கு"

உரிமையாளர் :- திரு சு. உதயகுமார்

காங்கேசன்துறை வீதி வல்வைச்சந்தி

---

## பாரத் பிரதிமை

பாலர்களின் பால்வடியும் முகத்தினையும்
இளைஞர்களின் இளமைத் துடிப்பும் அமைப்பினையும்
திருமணக்கோலத்தில் மணமக்களின் காட்சிகளையும்
வண்ணப்படமாக கலைநுட்பத்துடன் தரமாகத் தருபவர்கள்

"பாரத் பிரதிமை"

வல்வை கிழக்கு வல்வெட்டித்துறை

# R. V. G.

இதமான புகையின்பம் தருவது
ஆர். வி. ஜி. பீடிகளே!

தரமான புகையிலை, இதமான சுவை;
அதனால் அதிக விற்பனை.

**தரம் நாடுவோர் என்றும் பாவிப்பது**
**ஆர். வி. ஜி. பீடிகளே.**

**ஆர். வி. ஜி பீடி ஸ்தாபனம்**
58, குறுக்குத்தெரு
நல்லூர், யாழ்ப்பாணம்

---

எல்லா வகையான ஆங்கில மருந்துகள்
பால்மா வகைகள், குழந்தைகளுக்கான சத்துணவுகள்
மற்றும் சகல விதமான பவுடர்கள், சவர்க்கார வகைகள்
யாவும் நியாய விலையில் வாங்க இன்றே நாடுங்கள்

**ஆர். வி. ஜி மருந்தகம்**
504, மருத்துவமனை வீதி
யாழ்ப்பாணம்


Sri Vani Printers Uduppiddy